## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண். C.C. No.127/2017**

2024 ஆம் ஆண்டு மே மாதம் 22 ம் தேதி புதன் கிழமை குற்றம் முறையிடுபவரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி. தமயந்தி Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா.** 11

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராதாகிருஷ்ணன் | தொழில் | : உதவி ஆய்வாளர் ஓய்வு |
| தந்தை பெயர் | : சாமிநாதன் | சமயம் | : |
| கிராமம் | : | சாதி | : |
| வட்டம் | : | வயது | : |

**(எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. 317 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

1. நான் தமிழ்நாடு காவல்துறையில் கடந்த 31.03.2018 ல் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி ஓய்வுபெற்றுவிட்டேன். கடந்த 22.08.2015 தேதியன்று அனந்தபுரம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது அப்பம்பட்டை சேர்ந்த சுப்புராமன் மகன் சீனுவாசன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று அதன் அடிப்படையில் நிலையக்குற்ற எண் 149/2015 இ.த.ச பிரிவு 279, 337, 304(A) கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன்.

2.பின்னர், கடந்த 22.08.2015 தேதியன்று காலை 9.00 மணிக்கு சம்பவம் இடம் சென்று சாட்சிகள் மதியழகன், மணிவேல் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். பின்னர் இவ்வழக்கில் இறந்துபோன ராஜசேகர் என்பவருக்கு செஞ்சி அரசு மருத்துவமனையில் பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை தாக்கல் செய்தேன்.

3. பின்னர், இவ்வழக்கின் சாட்சிகளை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் மேல்விசாரணைக்காக காவல் ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன்.

**7. 22.08.2015 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 7**

**8. 22.08.2015 தேதியிட்ட பார்வை மகசர் அ.சா.ஆ.8**

**9.22.08.2015 தேதியிட்ட மாதிரி வரைபடம் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**குறுக்கு விசாரணை**

7. விபத்தை நேரில் பார்ப்பவர்கள் எங்கள் காவல் நிலையத்திற்கு தகவலோ, புகாரோ கொடுத்தார்களா என்றால் இல்லை. சம்பவத்தை நேரில் பார்க்காதவர் தான் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அப்பம்பட்டு கூட்ரோடு நான்கு ரோடு சந்திப்பு என்றால் சரிதான். அங்கு வேகத்தடை அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வேகத்தடை இருப்பதால் வேகமாக செல்ல முடியாது என்றால் சரிதான். ரோட்டில் அகலம் என்று வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. விபத்து எந்த பகுதியில் நடந்தது என்றால் இடது பக்கமாக நடந்தது. விபத்தில் ஈடுபட்ட வாகனத்தின் சிதைந்த பாகங்கள் ஏதேனும் கைப்பற்றினோமா என்றால் இல்லை. விபத்து நடந்த பகுதி கடைகள் உள்ள பகுதி என்றால் சரிதான். இரவு நேரத்திலும் அந்த பகுதியில் மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். அங்கிருந்த மக்கள் காவல் நிலையத்தில் தகவல் கொடுத்தார்களா என்றால் இல்லை. இந்த வழக்கில் 2 நபர் காயம்பட்டார்கள் என்றாலும், ஒருவர் இறந்துவிட்டார் என்றாலும் சரிதான். மேற்படி 3 நபர்களும் முனியாண்டி விலாஸ் ஓட்டலில் வேலை பார்ப்பவர்கள் என்றால் சரிதான். மேற்படி 3 நபர்களும் ஒரே வாகனத்தில் பயணம் செய்தவர்கள் என்றால் சரிதான். ஒரே வாகனத்தில் 3 நபர்களும் வேகமாக பயணித்ததால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. வரைபடம், பார்வை மகசர் நான் தான் தயாரித்தேன் என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்திற்கு அருகாமையில் வசிப்பவர்கள் சாட்சியாக இந்த வழக்கில் சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த சாலையில் எதிர்எதிர் வாகனம் செல்லும் வகையில் மத்தியில் வெள்ளை பட்டை பெயிண்ட் அடித்துள்ளார்கள் என்றால் சம்பவ சமயத்தில் அவ்வாறு எதுவும் ரோட்டில் போடப்படவில்லை. 2010 ல் இருந்தே வெள்ளை பட்டை இருந்த நிலையில் தவறாக நான் சொல்கிறேன் என்றால் சரியல்ல. முறையான விசாரணை மேற்கொண்டிருந்தால் வாகனத்தின் உதிரி பாகங்கள், ரத்த கரை படிந்த பாகங்கள்

ஆகியவற்றை வரைபடத்தில் காட்டியிருப்பேன் என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த நான் அந்த வழக்கை நானே புலன் விசாரணை மேற்கொண்டது தவறு என்றால் சரியல்ல. ஆய்வாளர் விசாரிக்க வேண்டிய இந்த வழக்கில் நான் விசாரணை மேற்கொண்டது தவறு என்றால் உயர் அதிகாரி உத்தரவுப்படி நான் மேற்கொண்டேன். உயர் அதிகாரி உத்தரவு வழங்கியிருந்தால் அதை இறுதி அறிக்கையில் குறிப்பிட்டிருப்பேன் என்றால் சரியல்ல. காயம்பட்டவர்கள் மது அருந்திவிட்டு வேகமாக வந்ததால் விபத்து ஏற்பட்ட நிலையில் விபத்து நஷ்ட ஈடு பெறுவதற்காக பொய்யாக புகார் கொடுத்ததை தவறாக வழக்கு பதிந்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை செய்த அதிகாரி நான் இல்லை என்றால் சரிதான். சம்பவம் குறித்து நேரடியாக எதுவும் எனக்கு தெரியாது என்றால் தெரியாது. கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்,. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி நான் இல்லை என்றால் சரிதான். வாதியால் பொய்யாக கொடுக்கப்பட்ட புகாரின் பேரில் சம்பவம் இடம் செல்லாமல் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் அ.சா.1 கொடுத்த பொய் புகாரை பெற்று வழக்கு பதிவு செய்யப்பட்டதற்கு ஆதராவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும், எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை** :

இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளள்ப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.